இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 21-05-2025



# மாநிலப் பட்டியலில் கல்வி!

**பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய, 'தேசியக் கல்விக் கொள்கை - 2020 எனும் மதயானை' நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி அவர்களும் மிகமிக முக்கியமான கோரிக்கை ஒன்றை வைத்துள்ளார்கள். 'கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றுங்கள்' என்பதுதான் அந்தக் கோரிக்கை. இரண்டு ஆண்டுகளுக்கு முன் பிரதமர் மோடி அவர்கள் முன்னிலையில் பேசும் போது முதலமைச்சர் அவர்கள் இதே கருத்தை வலியுறுத்தினார்கள்.**

அரசமைப்புச் சட்டம் எழுதப்பட்டபோது கல்வியானது, மாநிலப்பட்டியலில்தான் இருந்தது. 1975 ஆம் ஆண்டு இந்தியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்ட போது கல்வியானது பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. 42 ஆவது சட்டத்திருத்தம் மூலமாக இது செய்யப்பட்டது. 1976 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 246, ஏழாவது அட்டவணையில் பட்டியல் இரண்டில் இருந்தது. கல்வி குறித்து அனைத்து முடிவுகளை எடுக்கும் அதிகாரமும் மாநில அரசுகளின் கையில் இருந்தது. இப்போது கல்வி, பொதுப்பட்டியல் வரிசை 25 இல் இருக்கிறது.

**"நாட்டில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போது, கல்வியை மாநில பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றி நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசன திருத்தத்தை ரத்து செய்ய வேண்டும்"** என்று கோரி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் அவர்கள் 'அறம் செய்ய விரும்பு' அமைப்பின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கைத் தாக்கல் செய்தார். நீதிபதிகள் மகாதேவன், சுந்தர் மற்றும் செந்தில்குமார் ராமமூர்த்தி அடங்கிய முழு அமர்வில் இந்த வழக்கு விசாரணை நடத்தியது. இன்னமும் அந்த வழக்கு விசாரணையில்தான் இருக்கிறது.

மாநிலக் கல்விக் கொள்கையை வகுக்க நீதிபதி டி.முருகேசன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இக்குழு தனது அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது. அக்குழு தனது முதல் பரிந்துரையாக, 'கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்' என்று கூறி இருக்கிறது.

இன்றைய பா.ஜ.க. அரசானது, கல்வித் துறை முழுக்க முழுக்க ஒன்றிய அரசின் பட்டியலில் இருப்பதைப் போலவே செயல்பட்டு வருகிறது.

**ஒன்றிய அரசின் பட்டியலில் கல்வி இருப்பதைப் போலச் செயல்படும் அவர்கள், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்கிறார்களா என்றால் அது இல்லை. தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறைக்கு இந்த ஆண்டு ரூ.40 ஆயிரம் கோடி செலவு செய்கிறது. ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு, ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் செலவு செய்யும் தொகை ரூ.70 ஆயிரம் கோடி தான். நிதி ஒதுக்கீடு செய்யாமலேயே கல்வித் துறையை ஆக்கிரமித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.**

2022 ஆம் ஆண்டு ஒன்றிய கல்வி அமைச்சகத்தால் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது. 'கல்விக்கான நிதி நிலை செலவின பகுப்பாய்வு' என்று இதற்குப் பெயர். இந்தியாவில் கல்வித் துறைகளின் மொத்த வருவாய் செலவு ரூ.6.25 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டது. இதில் ஒன்றிய அரசால் செலவு செய்யப்படும் தொகை 15 விழுக்காடு மட்டுமே. 85 விழுக்காடு தொகையை மாநில அரசுகளே செலவு செய்கின்றன என்று அந்த அறிக்கை சொல்கிறது. 85 விழுக்காடு தொகையை செலவு செய்யும் மாநில அரசுகளால், கல்விக் கொள்கையை தீர்மானிக்க முடியாது என்பது அவமானம் அல்லவா?

**அனைத்துச் செலவுகளையும் செய்வது மாநில அரசு. ஆனால் பாடத்திட்டத்தை மட்டும் அவர்களது பாடத் திட்டமாக வைத்திருக்க வேண்டுமாம். மருத்துவக் கல்லூரியை கோடிக்கணக்கில் செலவு செய்து நடத்துவது மாநில அரசு. ஆனால் மாணவர் சேர்க்கையை 'நீட்' தேர்வு மூலமாக நடத்துவது ஒன்றிய அரசு. இதைப் போல எதேச்சதிகாரப் புத்தி இருக்க முடியுமா?**

அனைவருக்கும் கட்டாயக் கல்வி, அனைவருக்கும் அடிப்படைக் கல்வி, அனைவருக்கும் குறைந்த பட்சக் கல்வித் தகுதி - இதுதான் பள்ளிக் கல்வியின் அடிப்படை ஆகும். பள்ளிக் கல்வியின் இந்த முகத்தை, அடிப்படையைச் சிதைக்கவே, 'தேசியக் கல்விக் கொள்கை' கொண்டு வரப்படுகிறது. தேசியக் கல்விக் கொள்கை, நீட் தேர்வு ஆகியவைதான், 'மாநிலப் பட்டியலில் கல்வி' என்ற முழக்கத்துக்கு முக்கிய அடிப்படையாக உள்ளது.

ஒன்றிய அரசாங்கம் 'ஒரே மாதிரி பாடத்திட்டத்தில்' தான் கவனம் செலுத்துகிறது. இங்கே தேவையானது, தனித்தனி கவனிப்புகளும், அக்கறைகளும் தேவை. ஒரு பி.எம்.ஸ்ரீ. பள்ளியை கட்டுவது முக்கியமல்ல. அதில் படிக்கும் பிள்ளைகளுக்கு எந்த அடிப்படையில் கல்வி கற்பிக்கப்படப் போகிறது என்பதுதான் முக்கியம். உயர் தரமான கட்டடத்தை விட, கற்பிப்பு அக்கறையே அவசியம்.

**பள்ளிப் படிப்பை முடித்து உயர் கல்வி செல்பவர்களின் எண்ணிக்கை தேசிய அளவில் 27.1 சதவிகிதமாக உள்ளது. ஆனால் தமிழகத்தில் உயர் கல்விக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை 51.4 சதவிகிதம் ஆகும். அதாவது இந்திய சராசரியை விட தமிழகத்தின் சராசரி இரண்டு மடங்கு ஆகும். தேசிய தரவரிசைப் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த 14 பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன. முதல் 100 இடங்களுக்குள் தமிழகத்தைச் சேர்ந்த 33 கல்லூரிகள் இடம் பெற்றுள்ளன. இதே போன்ற உயர்நிலையில் பல மாநிலங்கள் இல்லை. எனவே, அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்ற கவனிப்புகள் தான் தேவை.**

கல்வி அறிவில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக கேரளா இருக்கிறது. 96.2 விழுக்காடு பெற்றுள்ளது கேரளா. மிகக் குறைவான கல்வி அறிவு கொண்ட மாநிலமாக பீகார் இருக்கிறது. இது 61.8 விழுக்காடு மட்டுமே. இரண்டு மாநிலக் கல்வியையும் ஒரே மாதிரியாக நடத்த முடியுமா?

**'நெருக்கடி நிலை காலம் இந்தியாவின் இருண்ட காலம்' என்று சொல்கிறார் பிரதமர் மோடி. இருண்ட காலத்தில் எடுக்கப்பட்ட முடிவை எதற்காக அவர் பின்பற்ற வேண்டும். 'இருண்ட காலம்' என்பது அரசியலுக்காக சொல்லப்படும் கருத்தல்ல என்று மெய்ப்பிக்கும் வகையில், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற பிரதமர் மோடி முடிவெடுக்க வேண்டும்.**



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, 17.5.2025 அன்று கோரையாறு மற்றும் உய்யக்கொண்டான் ஆறு கிழக்குக்கரை பகுதியில் ரூ. 68.00 கோடி மதிப்பீட்டில் புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாவட்ட துணைச் செயலாளர் விஜய ஜெயராஜ், மண்டலத் தலைவர் விஜயலட்சுமி கண்ணன், பகுதிச் செயலாளர் இளங்கோ, நகரப் பொறியாளர் சிவபாதம் மற்றும் கழக நிர்வாகிகள் திருநாவுக்கரசு, முத்து செல்வம், சோழன் சம்பத், ஹரி மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், நகரப் பொறியாளர் சிவபாதம், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைக்கிறார்!

# கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றியத்தில் மாநில அளவிலான மாபெரும் கபடி போட்டி!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – எஸ்.ரகுபதி – அன்பில் மகேஸ் பொய்யாமொழி – சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, மே 21 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநில அளவிலான மாபெரும் ஆண்கள், பெண்கள் கபடி போட்டி மே 23, 24, 25 ஆம் தேதி மாலை 5 மணி அளவில் மங்களா கோவில் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

முதல் நாள் நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமை வகிக்கிறார். மங்களா கோவில் கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.பரமசிவம் வரவேற்புரையாற்றுகிறார். நகராட்சி நிர்வாக துறை அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, இயற்கை வளங்கள் மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தாட்கோ சேர்மன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா.இளையராஜா, எம்.எம். அப்துல்லா எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, எம்.சின்னதுரை, வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு. சண்முகம் முன்னாள் எம்.எல்.ஏ. பெரியண்ணன் அரசு, கந்தர்வகோட்டை தொகுதி பொறுப்பாளர் சி குறிஞ்சிவாணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆண்கள் பெண்களுக்கான முதல் ஆட்டத்தை துவக்கி வைத்து தமிழ்நாடு துணை முதலமைச்சர், மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழா பேருரையாற்றுகிறார்.

மாநில கழக நிர்வாகிகள் கவிச்சுடர் கவிதைப்பித்தன், வி.என்.மணி, அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, த.சந்திரசேகரன், பி.டி.அரசகுமார், கே.ஆர்.என்.போஸ், சுப.சரவணன், புதுகை விஜயா, எம்.எஸ்.அசோக் பாண்டியன், மாவட்டக் கழக நிர்வாகிகள் அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம் லியாகத்அலி, கீரை தமிழ் ராஜா, வி.ஆர்.பி.ஆர் ஆர். ஆதித்யா துரைராஜா, ஒன்றிய கழக நிர்வாகிகள் கே.சுப்பிரமணியன், எம். ராஜேந்திரன், கே.ராஜேந்திரன், சு.குஞ்சப்பா, பி. ரவிச்சந்திரன், ராதிகா கருப்பையா, எஸ்.கோவிந்தன், டி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்ஆர். கலையரசன் நன்றி கூறுகிறார்.

இரண்டாம் நாள் 24 ஆம் தேதி நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பண்டின் தலைமை வகிக்கிறார். கந்தர்வகோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் மா. தமிழ் ஐயா வரவேற்புரையாற்றுகிறார். ஆண்களுக்கான ஆட்டத்தை தஞ்சை மாநகர மேயர் சண். ராமநாதன், பெண்களுக்கான ஆட்டத்தை புதுக்கோட்டை மேயர் திலகவதி செந்தில் துவக்கி வைக்கின்றனர்.

தவ.பாஞ்சாலன், மு.க. ராமகிருஷ்ணன் வெ.முத்து கிருஷ்ணன், என்.சேட்டு, கே.எஸ்.சந்திரன், மு.பி.ம. சத்தியசீலன், சி.சண்முகம், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஓ.எஸ்.வெங்கடாசலம், அ.இளங்குமரன், கே.பி. ஐயப்பன், ஆர்ஆர்.சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.செல்லத்துரை, இராசு.சந்தோஷ், என். சாத்தையா, தென்னலூர் எம். பழனியப்பன், ராப்பூசல் செந்தில்குமார், சிஆர்வி. சித்ரா, பேரூர்ச் செயலாளர்கள் உ.முருகேசன், ப.அண்ணாதுரை, வை.விஜயகுமார், எம்.எஸ்.ஏ.முகமது ரிஷா, வடக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் மு.சண்முகம், ஆர்.முத்துக்குமார், ஆசை. பாலகிருஷ்ணன், ஆர்.முருகேசன், என்.அம்பிகாபதி, ஜி.கலியபெருமாள், என். கலைச்செல்வி, கு.புஷ்பராஜ், அணிகளின் துணை அமைப்பாளர்கள் க.அரங்கராஜன், மு.வேலுமயில், பாஸ்கர், ஏழுமலை, எம். ஆர்.சண்முக பிரபு, கழக முன்னோடிகள் எடிசன், சுப்பிரமணியன், ஆறுமுகம், ஆதிமூலம், ராமசாமி, செல்லத்துரை, ராமராஜன், முருகேசன், காமராஜ், முத்துசாமி, மகேந்திரன், தர்மராஜ், முருகேசன், செல்வராஜ், முத்துக்குமார், ரங்கராசு, உருமையா, துரையரசன், ரத்தினம், தங்கமுத்து, ரத்தினம், முருகேசன், செந்தில், தனபால், கருப்பையா, ரங்கசாமி, ரெங்கசாமி, அப்துல் ஹமீது, சுதாகர், சுப்பிரமணியன், சண்முகம், செல்லத்துரை, லட்சுமணன், பாண்டித்துரை, பன்னீர்செல்வம், கோபால், ஸ்டுடியோ கண்ணன், கண்ணுச்சாமி, சீனிவாசன், கருப்பையா, தங்கராஜ், பன்னீர்செல்வம், பாலமுருகன், விஜயேந்திரன், பழனிவேல், காசிநாதன், தாமரைச்செல்வம், முருகேசன், ராஜேந்திரன், சித்ரா, ராஜசேகர், சதாசிவம், பழனிராஜ், தியாகபூபதி, பாண்டிச்செல்வம், சுப்பிரமணியன், முரளிதரன், மோகன், முருகதாஸ் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர்.

முனியாண்டி, கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தராஜ் நன்றி கூறுகின்றனர்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சி 25ஆம் தேதி நடைபெறுகிறது. புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமை வகிக்கிறார்.

கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் மங்களா கோவில் எம்.பரமசிவம் வரவேற்புரையாற்றுகிறார். எம்.ராஜா, எம்.கருப்பையா, டி.சூசை, ராஜ், கே.எஸ்.ச. இளையசூரியன், புத்தாப்பூர் எம்.சுப்பையா, டி.எம்.ஆர் ராமமூர்த்தி, வி.ஜிஆர். மணிவண்ணன், வி.என்.எம். பாலு, தவசுமணி, அ.பிரபா, சி.அரங்கநாயகம், எஸ்.வி. ஆர்.ஜெய் ஸ்டாலின், கவிவேந்தன், செந்தாமரைபாலு, ஆர்.டி.ஆர்.ராமசாமி, மு.க. முத்துகருப்பன், ஏ. விஜயா, பொன். பாரிவள்ளல், கா. இளவரசன், வே.ராஜேஷ், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், எம்.சிவக்குமார், அன்சாரி பாசித் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து பரிசு வழங்குகிறார். பெண்களுக்கான இறுதி ஆட்டத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் துவக்கி வைத்து பரிசு வழங்குகிறார்.

கந்தர்வகோட்டை ஒன்றிய, மாவட்ட துணை அமைப்பாளர்கள் அப்துல் ரஷீத், என்.ஜானகிராமன், ச.அர்ஜுனன், தாமரை பழனிவேல், பி. கோவிந்தராஜ், எம்.பாலு, எஸ்.கருணாநிதி, சதீஷ்குமார், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.நமச்சிவாயம், ஆர்.அசோக் குமார், எஸ். ஆனந்தராஜ், டி ராஜ்குமார், ஏ.பிரகாஷ், ஏவி.சுரேஷ் குமார், இளையராஜா, டி. ராஜதுரை, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஆர். சீனிவாசன், என்.வினோத் குமார், சசிகலா, பிரகதீஸ்வரன், முன்னாள் கவுன்சிலர்கள் எம்ஆர்கே. முருகேசன், திருப்பதி, வைரக்கண்ணு, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் அருணாச்சலம், செல்லப்பிள்ளை, குணசேகரன், மதியழகன், ராமராஜ், வெள்ளாளவிடுதி, மங்களா கோவில் கிளை கழக நிர்வாகிகள் முத்துகலியன், முனியாண்டி, பெரியதம்பி, கண்ணையன், சோழன் நாகராஜ், முருகதாஸ், ஆறுமுகம், ராமையா, நாகராஜ், கோவிந்தராஜ், சடையன், ரங்கசாமி, ரங்கராஜ், வடிவேல், பன்னீர்செல்வம், கர்ணன், முருகேசன், சந்திரன், பாக்கியராஜ், தனபால், வீரமுத்து, சத்யராஜ், முகமது ஹனிபா, துரை, அஞ்சய்யன், ரங்கசாமி, பூபதி, பாலகிருஷ்ணன், சாமிக்கண்ணு, திருப்பதி, கணேசன், பெரியசாமி,, ஜெய்சங்கர், கோவிந்தராஜ், மகாலிங்கம், வீரமுத்து, ராஜலிங்கம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கே.எம்.முருகேசன் நன்றியுரை கூறுகிறார்.

ஆண்கள் அணிக்கான பரிசுகள் முதல் பரிசு ஒரு லட்சத்து 50 ஆயிரம், இரண்டாவது பரிசு ரூ.1 லட்சம், 3ம் பரிசு 50,000, 4ம் பரிசு ரூ.50,000, பெண்களுக்கான பரிசுகள் முதல் பரிசு ரூ. 1 லட்சம், இரண்டாம் பரிசு 75 ஆயிரம், மூன்றாம் பரிசு 40 ஆயிரம் நான்காம் பரிசு 40 ஆயிரம் வழங்கப்படுகின்றன.

வி.ஆர்.திருமலை துரை ராஜா கல்லாக்கோட்டை ஜமீன்தாரர், எஸ்.வாசுதேவன், தொழிலதிபர் காரைக்கால் சோலை எம்.ராஜா, தமிழ்நாடு அமெச்சூர் கபடிக் கழகத் தலைவர், ஏ.சபியுல்லா தமிழ்நாடு அமெச்சூர் கபடிக் கழகச் செயலாளர், கோல்ட் ராஜேந்திரன் சென்னை மாவட்ட அமெச்சூர் கபடிக் கழகச் செயலாளர், கல்யாணசுந்தரம் சிவகங்கை மாவட்ட அமெச்சூர் கபடிக் கழகச் செயலாளர், தியாக. கலையரசன் தஞ்சாவூர் மாவட்ட அமெச்சூர் கபடிக் கழகச் செயலாளர், கபடிப் போட்டி ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்கின்றனர்.

## தமிழ்நாட்டில் கொரோனா பாதிப்பில் இருந்து 14 பேர் மீண்டனர்!

### பொதுமக்கள் அச்சம் கொள்ள வேண்டாம்: சுகாதாரத்துறை தகவல்!

சென்னை, மே 21-

தமிழகத்தில் கொரோனாவால் 18 பேர் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில் 14 பேர் குணமடைந்துள்ளனர். பொதுமக்கள் இதுகுறித்து அச்சம் கொள்ள வேண்டாம் என சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

முதல் அலை, இரண்டாம் அலை என அடுத்தடுத்து இந்தியாவில் கொரோனா பாதிப்பு பரவியது. லட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர். கோடிக்கணக்கானோர் தொற்றால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து தடுப்பூசிகள் கண்டறியப்பட்டு, 2 டோஸ்கள் செலுத்தப்பட்டன. இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா கட்டுக்குள் இருந்தது.

இந்த நிலையில், தற்போது ஆசியாவில் கொரோனா தொற்று பரவி வருகிறது. இதில், சீனா, தாய்லாந்து, ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பெருந்தொற்று அதிகரித்து வருகிறது. தமிழ்நாட்டில் கொரோனா பரவல் கட்டுக்குள் இருப்பதாகவும் தொடர்ந்து பரிசோதனை செய்து வருவதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. மேலும் வீரியம் இல்லாத கொரோனா என்பதால் பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என அறிவுறுத்தியுள்ளது.



ஈரோடு மத்திய மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட அ.தி.மு.க., பா.ம.க. கட்சிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் அக்கட்சிகளில் இருந்து விலகி ஈரோடு மத்திய மாவட்டப் பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.கோவிந்தராஜ், மாவட்ட துணைச் செயலாளர் எம்.பி.அறிவானந்தம், அம்மாபேட்டை ஒன்றியச் செயலாளர்கள் தெற்கு ஈஸ்வரன், வடக்கு சரவணன், பேரூர்ச் செயலாளர்கள் அம்மாபேட்டை பெரியநாயகம், நெரிஞ்சிப்பேட்டை கண்ணன், பேரூராட்சி தலைவர் ராகினி, மாவட்டத் தொழிலாளர் அணி அமைப்பாளர் வேலுச்சாமி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சன் சுரேஷ், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் சாந்தி சீதாராமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.